# வேதவன விநாயகர் திருவந்தாதி

(நேரிசை வெண்பாக்கள்)



ஆக்கம்- செ.சுதாகரன்
(வயலூரான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வேதவன விநாயகர் திருவந்தாதி

(நேரிசை வெண்பாக்கள்)



ஆக்கம்

"வெண்பா வித்தகர்" செ. சுதாகரன்

(வயலூரான்)

**2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூலின் பெயர் :- வேதவன விநாயகர் திருவந்தாதி
நூலாசிரியர் :- "வெண்பா வித்தகர்" செல்வராஜா சுதாகரன் (வயலூரான்)
பக்கங்கள் :- I-XIV + 1-21 = 35
பிரதிகள் :- 300
பதிப்புரிமை :- நூலாசிரியர்
முதற்பதிப்பு :- 2020 டிசம்பர் 19
அட்டைப்படம் :- வரோ கிரியேஷன்ஸ், மட்டுவில் வடக்கு
அச்சுப் பதிப்பு :- திருக்கணித பதிப்பகம், சாவகச்சேரி.
முடிப்புவிலை :- *150/=*

*Title* :- *Vethavana Vinayagar Thiruvanthathy*
*Author* :- *"Venpa Viththagar" Selvarajah Suthakaran (Vayalooran)*
*Pages* :- I-XIV + 1-21 = 35
*No.of.Copies* :- 300
*Copy Right* :- *Author*
*First Edition* :- *2020 December 19*
*Cover Disigen* :- *Varo Creations , Madduvil North*
*Printers* :- *Thirukkanitha Pathippaham, Chavakachcheri.*
*Costing Price* :- *150/=*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

சகல வளங்களும் சைவமும் தமிழும் சிறந்தோங்கும் தென்மராட்சியின் தலைநகராம் சாவகச்சேரியில் கல்வயல் என்னும் சிறப்புமிகு பதியொன்று உள்ளது. அப்பதியின் கண்ணே சிறந்து விளங்கும் ஆலயங்களில் பழம்பெருமை வாய்ந்ததும் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பவற்றால் சிறந்து விளங்குவதும் ஆகிய வேதவன விநாயகர் ஆலயம் பக்தி பூர்வமும் திருவருள் நிறைந்ததுமாகும். அப்பெருமானின் தல விருட்சமாக பலாமரம் அமைந்து விளங்குகின்றது.

அங்குறையும் பெருமான் அடியார்க்கெல்லாம் வேண்டிய வேண்டியாங்கருளி விக்கினந் தீர்த்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். பெருமானின் ஆலயம் இராஜகோபுரத்துடனும் இலண்டனிலிருந்து வரவழைக்கப்பட்ட பெரிய காண்டாமணியோடும் உயர்ந்து சிறந்து விளங்குகின்றது. அவ்வாலயத்தில் உறையும் வேதவனப் பெருமானை நினைந்துருகி வழிபடும் எண்ணற்ற அடியார்களில் விஷேடமாக மாவளவு அப்பாக்குட்டி வாத்தியார் எனும் சிறந்த புராணமேதை குறிப்பிடத்தக்கவர். அவரது பேரனான செல்வராஜா சுதாகரன் அவர்கள் வயலூரான் என்னும் புனைபெயரில் கவிகள் புனைந்து வருகின்றார். அவர் எம்பெருமான் மீது "வேதவனம்" என்னும் பெயரில் ஆலய வரலாற்றோடு இணைந்த பஜனைப்பாடல் தொகுதியையும் "வேதவன விநாயகர் பிள்ளைத்தமிழ்" மற்றும் வேதவன விநாயகர் கவசம் என்னும் மூன்று நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார்.

அவ்வரிசையில் பெருமானுக்கு ஓர் அந்தாதி பாடவேண்டும் என்னும் எண்ணம் பெருமானின் திருவருளோடு ஏற்பட்டு "வேதவன விநாயகர் திருவந்தாதி" என்னும் நூறு நேரிசை வெண்பாக்களாலான தொகுப்பை இப்போது வெளியிடுகின்றார்.

## அந்தாதி பாடல்கள் பற்றிய சில குறிப்புகள்

அந்தாதிப் பாடல்கள் பல்லவர் நாயக்கர்கால இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்ற சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் புலவர் பெருமக்கள் இறைவன் மீதும் அந்நாட்டு அரசர்கள் மீதும் தெய்வீக சக்தியோடு அந்தாதிப் பாடல்கள் பாடியுள்ளார்கள். அவ்வகையிலே நாயன்மார்கள் இறைபக்தியோடு பாடியமைத்த பெரியார்கள் வரிசையில்

1. காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடியுள்ளார்.
2. மாணிக்கவாசக சுவாமிகள் "திருச்சதகம்" , "நீத்தல் விண்ணப்பம்" ஆகியவற்றை அந்தாதியாகப் பாடியுள்ளார்.
3. திருமூலர் திருமந்திரத்தில் பல அந்தாதி பாடியுள்ளார்
4. நம்மாழ்வார் மகாவிஷ்ணு மூர்த்தியை நினைந்து பாடிய "திருவாய்மொழி" ஆயிரம் பாடலும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது.
5. அதிவீரராம பாண்டியர் "திருக்கருவைப் பதிற்றுப்பத்து" அந்தாதி பாடியுள்ளார்.
6. துறைமங்களம் சிவப்பிரகாச சுவாமிகள் "திருச்செந்தில் நீரோட்டகயமத அந்தாதி" பாடியுள்ளார். இது திருச்செந்தூர் முருகன் மீது பாடப்பெற்றது.
7. கம்பர் பாடிய "சடகோடர் அந்தாதி" "சரஸ்வதி அந்தாதி" என்பனவும் அந்தாதி வடிவங்களே.
8. குமரகுருபர சுவாமிகள் "கந்தர் அந்தாதி" பாடியுள்ளார்.
9. அபிராமிப் பட்டர் " அபிராமி அந்தாதி" பாடியுள்ளார்.
10. எங்கள் ஈழவள நாட்டில் முன்னேஸ்வரம் கோவில் கொண்ட வடிவழகி அம்பாள் மீது வித்துவான் கி.வா. ஜெகன்நாதன் அவர்கள் "வடிவழகி அந்தாதி" பாடியுள்ளார்.

இன்னும் பல ஈழத்து ஆலயங்கள் மீது புலவர்கள் பலர் பல அந்தாதிகள் பாடியுள்ளார்கள். பக்திப் பெருக்கினைக் கூட்டுவது அந்தாதிப் பாடல்களின் நோக்கமாகும். இந்த வகையிலேயே கவிஞர் வயலூரான். செல்வராஜா சுதாகரனின் "வேதவன விநாயகர் திருவந்தாதி" அமைந்துள்ளது.

இந்நூலினை நூறு நேரிசை வெண்பாக்களால் கவிஞர் யாத்துள்ளமை சிறப்பம்சமாகும். ஒரு கவிஞருக்குரிய - ஒரு நூலுக்குரிய தன்மையான அவையடக்கம் சிறப்பாக அமைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளது. அதனைத் தொடர்ந்து கடவுள் வாழ்த்து , குருபக்தி என்பன தெய்வீகத் தன்மையோடு அமைந்திருப்பது சிறப்பாக உள்ளது.

அந்தாதிப்பாடல்கள் பாடுவது அவ்வளவு எளிதல்ல. முதலாவது பாடலின் இறுதிச்சீரை அடுத்த பாடலின் முதற்சீராகக் கொண்டு பாடப்படல் வேண்டும். இவ்வாறு தொடரும் பாடல்களில் இறுதிப்பாடலின் இறுதிச்சீர் முதற்பாடலின் முதற்சீராக அமைதல் வேண்டும். அத்தோடு இவ்வந்தாதி நேரிசை வெண்பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. மரபுப்பாவகைகளில் மிகவும் கடினமான இலக்கண விதிகளையுடைய பாவகை வெண்பாக்களாகும். இவ்வாறான நூறு வெண்பாக்களில் இந்நூலைக் கவிஞர் எழுதியுள்ளமை மேலும் சிறப்பாகும். வேதவனத்தானின் திருவருள்தான் கவிஞரை இயக்கி எழுதவைத்துள்ளது என்றால் மிகையில்லை. இவ்வண்ணமாக எம்பெருமான் வேதவன விநாயகர் மீது கவிஞர் மேலும்பல திவ்விய பிரபந்தங்களைப் பாடவேண்டும். மற்றும் ஆலயங்களிலும் அவரது கவிச்சேவை தொடரவேண்டும். அப்பெருமானது திருவருளால் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும், நோயற்ற வாழ்வும் கிடைக்கப் பெற்று வாழவேண்டும் என்று வாழ்த்தி ஆசி வழங்குகின்றேன். அத்தோடு வேதவனப் பெருமானின் திருவருளை முன்னிட்டு "வேதவனக் கவிராயர்" என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கின்றேன்.

வாழ்க வளர்க வணக்கம்

**சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள்** J.P (மட்டுவில்)
ஆலய முன்னாள் பிரதம சிவாச்சார்யார்
42/11, சுவிசுத்தாராம றோட், வெள்ளவத்தை, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரகம தேசிய கல்வி நிறுவக ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் நாயகம்
**கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம்** அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

"சிவபூமி" என்று திருமூலரால் போற்றிச் சிறப்பிக்கப் பெற்ற இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியாகிய தென்மராட்சி பிரிவில் சாவகச்சேரி நகர எல்லைக்குள் நிலவளம் நீர்வளம் ஆன்மீக வளம் கல்வி வளம் மற்றும் பசுமைச் செழிப்பு நிரம்பப் பெற்ற திருமிகு ஊர் கல்வயல் ஆகும்.

இவ்வூர் மக்கள் சைவநெறி நின்று சைவ பண்பாடு கலாசாரம் ஒழுக்க விழுமியங்கள் மற்றும் இயம நியமங்கள் ஆகியவற்றை வாழ்வில் பேணிப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருபவர்கள் ஆவர். தெய்வ பக்தி சிவனடியார்களை ஓம்பும் பண்பு விரத அநுட்டானங்கள் தான தர்மங்கள் செய்தல் விருந்தோம்பல் ஆலயங்களில் புராணபடங்கள் செய்தல் கேட்டல் புலால் மறுத்தல் மது விலக்கல் ஆகிய உயர் ஆன்மீக விழுமியங்கள் மற்றும் ஆசாரங்கள் பண்டு தொட்டுக் கல்வயல் ஊர் மக்களால் அநுசரிக்கப்பட்டு வருகின்றமை நோக்கற் பாலது.

கல்வயல் வாழ்மக்கள் சிவனார் மைந்தன் விநாயகப் பெருமான் மீது பெரும் பக்தியும் பேரன்பும் உடையவர்கள். எக் கருமத்தை தொடங்கும் போதும் விநாயகரிற்கு முதலில் வணக்கம் செலுத்தி அவரின் அருட்துணையுடன் ஆரம்பித்து அக் கருமத்தை செய்வது கல்வயல் வாழ் மக்களின் நெடுங்கால வழமையாகும். தும்பிக்கையான் மீது நம்பிக்கை வைத்து தொடங்கும் கருமங்கள் அனைத்தும் வெற்றி பெறுவது உறுதி என்பதனை நான்கு மறைத்தீர்ப்பாக ஏற்றுக் கொண்டவர்கள். அதே வேளை அநுபவ ரீதியாக கண்டறிந்தவர்கள். இவ்வூர் மக்கள் நம்பினார் கெடுவதில்லை என்பது நான்கு மறைத்தீர்ப்பு என்ற கூற்றில் நம்பிக்கை கொண்டவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் ஊரின் நாலாபக்கங்களிலும் பிள்ளையார் கோயில்கள் உள்ளன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" ஆகிய ஔவையார் அருள் மொழி கூற்றிற்கமைய முற்காலத்தில் இவ்வூரில் வாழ்ந்த ஆன்றோர் பெருமக்கள் பிள்ளையார் கோயில்கள் வைரவர் கோயில்கள் ஆகியவற்றை முறைப்படி அமைத்து வழிபாடு செய்து வாழ்வில் வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார்கள்.

முன்னோர் காட்டிய ஆன்மீக வழிமுறைகளை அவர்கள் வழிவந்த பரம்பரையினரும் பின்பற்றி பிள்ளையார் ஆலயங்களை புனரமைத்து உரிய காலங்களில் கும்பாபிஷேகம் செய்து நித்திய நைமித்திய பூசை ஆராதனைகள் ஆகியவற்றை நிறைவாக நடாத்தி உள்ளன்போடு வழிபாடு செய்து அருள் பெற்று தம் வாழ்க்கையை நல்ல வண்ணம் இனிது நடாத்தி வருகிறார்கள்

பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம், வேதவன விநாயகர் ஆலயம், புலுட்டையன் பிள்ளையார் ஆலயம், சித்தன் மாவடி பிள்ளையார் கோயில், விளைவேலி மருதடி விநாயகர் ஆலயம், மற்றும் மானாவளை பகுதியில் கோயில் கொண்டிருக்கும் நெல்லியடி பிள்ளையார் ஆலயம் என்பன கல்வயல் மற்றும் எல்லை புறங்களில் அமைந்துள்ள விநாயகர் ஆலயங்கள் ஆகும்

பண்பாடு என்பது பண்டு தொட்டு வழி வழி வந்த அறிவு நிலையின் ஆக்கம் என்பர். பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்கிறது கலித் தொகை. உலகத்தோடு ஒட்ட ஓழுகுதல் என்கிறது திருக்குறள். மனப்பண்பு அறிவுப்பண்பு புராண இலக்கிய வளர்ச்சி கலை உணர்வு சமய ஓழுக்க மரபு பேணல் என்பன பண்பாடு ஆகும். கல்வி மூலம் அவை பேணப்பட்டும் வருகின்றன.

கல்வயல் என்ற சொல் கல்விவயல் என்ற பதத்தின் திரிபாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. "கல்" என்ற அடிச்சொல்லில் இருந்து தோன்றியது கல்வி என்ற சொல். கல் கல்லுதல் என்றால் தோண்டுதல் என்று பொருள் கொள்வர். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விவயல் என்பதே திரிந்து கல்வயல் என்றானது எனில் அது மிகையாகாது.

கல்வியறிவு வளம்மிக்க கல்விமான்கள், பண்டிதர்கள், ஆசிரியப் பெருந்தகைகள், புராண வித்தகர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், வித்துவான்கள், புலவர்கள், அறிஞர்கள் எனப் பலதரப்பட்ட கல்வியியலாளர்களை விளைச்சலாக ஈய்ந்த வளம்மிக்க நிலம் என்பதால் கல்வயல் என்னும் திருப்பெயர் சூட்டப்பட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

கல்வயலூரிற் தோன்றியவர்களில் ஒருசிலர் அறிஞர்களாக இருப்பினும் குடத்துள் விளக்குப்போன்று மறைபொருளாக இருந்தனர். இன்னொரு பகுதியினர் குன்றில் ஏற்றிய தீபம்போலப் பிரகாசித்தனர் - இன்றும் பிரகாசித்துக் கொண்டும் உள்ளனர். அத்தகைய இளைய தலைமுறையினருள் குறிப்பிட்டுக் கூறத்தக்க புலமையும் தகைமையும் உடையவர் வளர்ந்துவரும் இளங்கவிஞர் திரு.செல்வராஜா சுதாகரன் (வயலூரான்) ஆவார். தாம் பிறந்து வளர்ந்த கல்வயல் ஊருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் "வயலூரான்" என்னும் புனைபெயரைத் தாம் சூடிக்கொண்டார். நான் கவிஞரின் ஊரவன், உறவினன் என்ற முறையில் எமது உளங்கனிந்த நல் வாழ்த்துக்களைக் கவிஞர் வயலூரான் அவர்களுக்கு வழங்கி மகிழ்கின்றேன்.

"பொய்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் புலவர்களுக்கு வழங்கியுள்ள அறிவுரையும் அறவுரையுமாகும். பொய்மையாளர்கள் ஆகிய மனிதர்களைப் புகழ்ந்து பாடலாகாது. அதனை "நரஸ்துதி" என்பர். இறைவனையே பாடுபொருளாகக் கொண்டு இறைவன் புகழ்பாடிப் போற்றித் துதிக்க வேண்டும் என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அது சைவமரபாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. சுந்தரர் காட்டிய சைவமரபு வழியில் நின்று வயலூரான் அவர்கள் தமது குலதெய்வமான கல்வயல் வேதவன விநாயகப் பெருமான் மீது "வேதவன விநாயகர் திருவந்தாதி" பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமான் திருவருளாலே கவிஞர் சிந்தை மகிழ விநாயகர் அந்தாதி பாடியுள்ளமை அரும்பெரும் சாதனையாகும். வேதவனத்து-வேழமுகத்து விநாயகனைத் திருவந்தாதி பாடித் தொழுதுவர வாழ்வு மிகுந்துவரும்.

கவிதையில் இனிமை, எளிமை, ஆழமுடைமை ஆகிய பண்புகள் மலர்ச்சி பெற்றிருக்கும் போது அழகுக்கலை ஆகிறது. அழகே தெய்வம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் மெய்ப் பொருளாகிய இறைநிலை பாடுபொருளாக அமையும்போது கவிஞன் தெய்விகக் கவிஞனாகவும் மகாகவியாகவும் உயர்ச்சி பெறுதல் உறுதியாகிவிடுகிறது.

புராண வித்தகர் அப்பாக்குட்டி உபாத்தியாயர் புராண வகுப்புக்களை நடத்துதல், ஆலயங்களில் புராணபடனம் செய்தல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தவர். நாவலர் பெருமான் காட்டிய நன்னெறியில் கந்தபுராண கலாசாரம் பேணுவதிலும் பரப்புவதிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். கற்றல் கற்றாங்கொழுகுதல் இரண்டிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். அன்னாரின் மகன் செல்வராஜா ஆவார். செல்வராஜா மகன் சுதாகரன் (வயலூரான்) இந்நூலை இயற்றிய கவிஞன் ஆவார். ஆகவே "வயலூரான்" கருவிலே திருவுடையார் எனறால் மிகையாகாது.

"வயலூரான்" மரபு வழிசார்ந்து வேதவன விநாயகர் திருவந்தாதி இயற்றியுள்ளார். அவனருளாலே அவன்தாள் வணங்கி சிந்தைமகிழத் திருவந்தாதி பாடியமையால் இந்நூல் சிறப்பாகவே அமைந்திருப்பது உறுதியாகிவிடுகின்றது.

"வயலூரான்" மேலும் மேலும் சிறந்த கவிஞனாக வளர்ச்சி பெற்று மேலும் பல அருட்கவிதை நூல்களை யாத்து சைவப் பயிர் வளர்க்க வேதவன விநாயகர் திருவருள் புரிவாராக. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

வாழ்க வளத்துடன் - வாழ்க வையகம்.

16 6/2 Vandervert Place,
Dehiwala,
Srilanka.

கலாபூஷணம், கலாநிதி
குமாரசுவாமி சோமசுந்தரம்
ஓய்வுநிலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள அனைவரையும் இணைக்கக் கூடிய ஓர் அற்புதமான மொழி நமது தமிழ்மொழியே ஆகும். உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களை என்னுடன் இணைப்பதும் தமிழ் மொழியே. நேருக்கு நேர் பார்த்திராத நண்பர்களையும் முகநூல் வழியாக இணைத்து அவர்களது நட்புறவை வளர்ப்பதும் தமிழ் மொழியே ஆகும்.

அத்தகைய நண்பர்களில் கவிஞர் செல்வராஜா சுதாகரனும் ஒருவர். அவர் இலங்கை மண்ணில் சாவகச்சேரியில் வாழ்பவர். அவரது வேதவன விநாயகர் அந்தாதி என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குமாறு என்னைத் தொடர்புகொண்டு கேட்க வைத்தது எனது அன்னை தமிழே ஆகும். இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் ஆன தொடர்பு பன்னெடுங்காலமாக தொடர்வதாகும். பண்டைய நாள் முதல் இந்நாள் வரை இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழ்பவர்கள். இந்திய இலங்கைத் தமிழர்களை இணைத்து உலக மாந்தர்கள் ஆகக் கொண்டு செல்வதும் தமிழ்மொழியே ஆகும்.

வெண்பா என்பது தமிழ் கவிஞர்கள் இடத்தே ஒரு கடினமான பாவகையாகவே அறியப்பட்டு வருகின்றது. வெண்பா என்பது கடினமான பதவகை அல்ல. அதற்கான சூத்திரம் தெரிந்தால் வெண்பா மிகவும் இலகுவான பாவகையே ஆகும். வெண்பாவை எழுதுவதே கடினம் என்று நினைக்கும் பாவலர்கள் மத்தியில் அந்த வெண்பாவை அந்தாதி வடிவில் எழுதுவது என்பது எவ்வளவு கடினமாகத் தோன்றும். பாவலர் செல்வராஜா சுதாகரன் அந்தக் கடினமான பணியை மிக இலகுவாகச் செய்து இருக்கின்றார். படிக்கப் படிக்கத் திகட்டாத ஒரு பாமாலையாக இந்த வெண்பா அந்தாதி திகழ்கின்றது. எந்த இடத்திலும் தளை தட்டாது எழுதுவது மிகவும் சிரமமான ஒன்றுதான் என்றாலும் கவிஞர் தளை தட்டாது வெண்பாக்களை எழுதியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையடக்கத்துடன் நூல் தொடங்குகின்றது. மரபிலே யானொன்றும் மாவீரன் அல்லன் என்றே தன்னடக்கத்துடன் அவையடக்கத்தைத் தொடங்குகின்றார். ஏதும் பிழையிருப்பின் மன்னித்தருளல் மரபு என்று அவரே மரபைச் சுட்டுகின்றார். விநாயகப் பெருமானுக்கு நான்கு வெண்பாக்களில் கடவுள் வாழ்த்து ஒன்றைப் படைத்துள்ளார்.

நூலெழுந்த காதை என்ற ஒரு பகுதியைச் சேர்த்திருக் கின்றார். ஆசிரியப்பாவில் ஆற்றொழுக்காய் ஓடிச் செல்கின்றது காதை. நன்றுயர் ஈழநாட்டில் எனத் தொடங்கி மலர்ந்திடும் இங்கே மரபு என ஒரு நூறு வெண்பாக்களை மிக அருமையாக யாத்தளித்துள்ளார் வயலூரான் அவர்கள். எதை எடுப்பது எதை விடுவது எனத்தெரியவில்லை. எல்லா வெண்பாக்களுமே இறைவனை வேண்டும் வெண்பாக்களே.

அவர் பிறந்த ஊரான தென்மராட்சியில் உள்ள கல்வயல் என்ற இடத்தில் கோவில் கொண்டுள்ள வேதவன விநாயகரைப் பற்றிப் பாடும்போது உயர்வுபெறும் ஊர், ஏற்றம் தரும் ஊர், எழில் கூட்டி செல்வம் கூட்டும் ஊர் மற்றும் அறம்பேணி வாழும் மக்கள் உள்ள ஊர் என அவ்வூரைச் சுட்டுகின்றார். நம்பிக்கை தரும் தும்பிக்கை நாதன் விக்கினங்கள் நீக்கி வரும் அடியாரைக் காப்பான், சிவகதி சேர்ப்பான் என்று சிறப்பிக்கின்றார்.

இவ்வாறு வெண்பாக்கள் மிக அழகாக நேர்த்தியாக வார்க்கப்பட்டுள்ளன. இருவிகற்ப, ஒருவிகற்ப நேரிசை வெண் பாக்கள் எதுகை மோனை தவறாமல் எழுதப்பட்டுள்ளன. அந்த திருக்கோயிலில் நடைபெறும் பூசைகள், திருவிழாக்கள், அன்ன தான நிகழ்வுகள், திருக்கல்யாண வைபவங்கள், அனைத்தையும் நெடுக உரைத்துள்ளார். வேதவன விநாயகர்க்கும் கல்வயலுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்நூலைப் படிப்பவர்களுக்கும் நூலைப் படிக்கக் கேட்பவர் களுக்கும் அந்த வேதவனவிநாயகர் அருள் தருவார் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணம். காலமுள்ளவரை இந்நூல் கல்வயலையும் வேதவன விநாயகரையும் பேசுவதோடு மட்டுமல்லாமல் இந்நூலை யாத்தளித்த வயலூரான் செல்வராஜா சுதாகரன் அவர்களையும் பேசும்.
இன்னும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழ்ப்பணியாற்றுமாறு இந்நூலாசிரியரை உளமார வாழ்த்துகின்றேன்.

இராம வேல்முருகன்
M.Sc, B.Ed, M.A.M, M.L.I.S, M.B, A.D.Y.D.W
முதல்வரின் நேர்முக உதவியாளர் - தொழில்நுட்பக் கல்வித்துறை
12. புங்கஞ்சேரி தெரு, வலங்கைமான் 612804,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தாதி பாடி அளக்கவொண்ணாப் பெருமைபெற்றார்!

அந்தாதி என்ற அரும் வடிவம்...அன்று
ஆண்டிருந்த தெம்தமிழின் இலக்கி யத்தை!
'அந்தச்' சொல் அடுத்த பாட்டின் 'ஆதி' யாகி
அணுக்கமாகப் பிணைக்க...கவிக் கோர்வை நீள
வந்து தொடர்ந்திடும் அழகுப் பாவின் மாலை
மறுபடியும் தொடக்கத்தை சுழன்று சேரும்!
சிந்தையள்ளும் கருத்தும் ஒரு சீராய்ச் சுற்றி
தெளிந்த முழுப் பொருள் தன்னை திரட்டி சேர்க்கும்!

இந்த வகை இன்று 'அரும்பொருட்கள் சேர்க்கும்
இல்லத்தில்' கூடக் காணக் கிடைக்கா தாச்சு!
அந்தாதி பாடவல்ல ஆற்றல் உள்ளோர்
அருக...வழக்கொழிந்த வடிவிதுவென் றாச்சு!
செந்தமிழின் சிறப்புகளில் ஒன்று...யாரின்
திறமைக்கும் சவால்விட்டு...அநாதை ஆச்சு!
இந்த சவால் ஏற்று "இது அநாதை இல்லை"
எனச்சொன்னார் 'வயலூரான்'...உரைத்தேன் வாழ்த்து!

'கல்வயலூர்' 'வேதவனப் பதியில்' வாழும்
கஜமுகனின் கடலளவு கருணை தன்னை
நல்லமுதத் தமிழில் அந்தாதி தன்னில்
நாமும் நாடும் உலகமுந்தான் வியந்து பார்க்க
எல்லையற்ற...புலவர்க்கும் புலியாய் ஆன...
எழில்நிறை நேரிசை வெண்பா நூறில் கோர்த்து
நல்கி இன்று 'வயலூரான்' நவின்ற கீதம்
நாற்றிசையில் இவர்புகழை நிதமும் பேசும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசபணி கடந்து செய்யும் சமூக சேவை,
அனுதினமும் தமிழ்மீது பெருகும் பாசம்,
குறையில்லை வயது எதுங் கற்க என்ற
கொள்கை, தமிழ் மரபு யாப்பில் தீராக் காதல்,
இருந்து கற்றுப் பயிற்சி செய்து தெளிந்து தேறும்
இயல்பு, இவற்றால் அந்தாதி இன்று பாடி
பெருமைபெற்றார் 'வயலூரான்'...இறையின் ஆசி
பெருகவைக்கும் இவர் கவியை...மகிழ்ந்தேன்...வாழி!

கவிஞர் த. ஜெயசீலன்
ஆணையாளர், மாநகரசபை,
யாழ்மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவையடக்கம்

மரபிலே யானொன்றும் மாவீரன் அல்லத்
தரணியி லந்தா திதர - தரத்திற்
குறைகள் பலவுமிதிற் கூடி யிருக்கும்
நிறையென ஏற்பீரே நின்று

நின்றிங்கு நானும் நிறையுடைத் தென்றுமே
மன்றிற் படைத்து மகிழ்ந்துள -என்றனின்
அந்தாதி தன்னில அரும்பிழை கண்டிடின்
எந்தனை ஏற்பீர் இருந்து

இருந்து பலநாள் இயற்றியே இன்று
பெருமை யுடனே படைக்கும் - அருந்தமிழ்
அந்தாதி தன்னை அவையிலே ஏற்பீரென்
சிந்தா குலமதைத் தீர்த்து

தீர்த்துமே நின்று திருத்தமாய் என்னையே
பார்த்திட வேண்டுமிப் பாரிலே- ஆர்வமாய்
இன்று படைத்திட்ட இன்றமிழ் நூலுமிங்கு
நின்று நிலைத்தலே நேர்

நேரிசை வெண்பாவாய் நேர்த்தியாய் நானுமே
பாரிற் படைத்த படையலில் -தேறியுள
என்பிழை தன்னை இகழாமல் என்றுமே
மன்னித் தருளல் மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

மரபு வழிநின்று மாபெருமந் தாதி
தரவே விழையும் தனயன் - தரமுடன்
முந்திப் புகழுற முன்னேறிச் செல்லவே
சிந்தித் தருளுக சீர்.

சீர்வளர் கல்வயலூர் செப்பார் பதியிலுறைப்
பேர்வளர் வேதவனப் பெம்மானே - பார்தனில்
அந்தாதி கொண்டுனை அர்ச்சிக்கு மெந்தனின்
சிந்தையில் வந்துநீ சேர்.

சேர்ந்துமே எந்தனின் சிந்தையில் வந்தமர்ந்து
ஓர்பெரு மந்தா தியுரைக்க - ஆர்வமுடன்
காத்திருக்கு மென்னையிக் காசினி தன்னிலே
ஏத்தியே வைப்பாய் இனி.

இனிதுறக் கல்வயலார்க் கின்னருள் நல்கிக்
கனிவுற என்றுமே காக்கும் - நனிபுகழ்
வேதவன னுன்மேல் விரும்பியோர் அந்தாதி
ஏதமறப் பாடவே ஏத்து.

ஏத்திடும் கல்வயலில் என்றுமே வீற்றிருந்து
காத்திர மாயருளும் கற்பகமே - ஆத்திரத்தால்
பற்றிழந்து நானும் பரிதவிக்க முன்னராய்
சிற்பரனே தந்திடுவாய் சீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலெழுந்த காதை

சீர்வளர் சைவம் செழித்துமே யுயரும்
பார்புகழ் யாழ்நகர் பாங்கரில் மிளிரும்
பேர்பெறு தென்மராட்சி பெட்புற விளங்கும்
காசினி புகழும் கவினார் ஊராம்
மாசிலா மனிதரும் மகிழ்வுடன் வசிக்கும்
கல்வயல் எனவே கற்றுளோர் நவிலும்
நல்லெழில் பதியின் நாப்பண் அமர்ந்து
தொல்லைகள் நீக்கித் தூயவாழ் வளிக்கும்
விநாயகன் வாழும் வேதவ னத்தில்
அநாதியாய் அமைந்த ஆலயம் தன்னில்
எழுந்தது கோபுரம் எழிலும் மிகவே
அந்தநற் கோபுர அபிடேக நாளில்
எழுந்த மலரில் என்கவி கண்டே
அந்தநாள் முதலாய் அடிக்கடி என்னை
அழைத்துப் பணிப்புரை அன்புடன் விடுத்தார்
முன்னாள் குருவாம் முதுபெரும் அறிஞர்
இன்னாள் தலைநகர் இருந்திடும் செம்மல்
கிரியை பலதில் கீர்த்தியும் பெற்ற
கிரியா கான கலாமணி யவராம்
பிரதிஷ்டை செய்வதில் பேரதும் பெற்றே
பிரதிஷ்டா வித்தகராய் பேரும் புகழுமுற்றார்
சிவாகம் தன்னில் தேர்ச்சிகள் பெற்றுச்
சிவாகம ஞானசா கரமென் றாகியே
ஆலயம் தோறும் அரும்பணி செய்த
சீலம் மிகுந்த செம்மொழி யறிஞர்
இருமொழி தன்னில் இருக்கும் புலமை
தருமதி யதனால் தரணியில் நல்ல
நூல்கள் பலவும் எழுதிய ஆசான்
சோம சுந்தரத் தூயகுரு வானவர்
சேமமாய் என்றும் செப்பிய வார்த்தை
வேதவன நாதனுக்கு விரும்பி யந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதமிலா தெழுதிட எண்ணுவீர் என்பதே
எந்தையின் மனதில் இருந்திடும் நண்பர்
சிந்தையில் எழுந்தசீ ரந்தாதி பாட
முந்திப் பலநாள் முனைந்த போதும்
அந்தப் பணியும் அரைகுறை யாக
நின்றே போயிட நினைவில் கொண்டே
என்றும் முயன்று எழுதிடத் துணிந்தேன்
எங்கள் வாழ்வை எங்களின் ஊரை
என்றும் எண்ணும் எங்கள் குருவாம்
என்றன் எழுத்துக் கெப்பவும் ஆசிகள்
நன்றே வழங்கும் நற்றமிழ்க் குருவின்
எண்ணம் தன்னில் எழுந்த சிந்தனை
காணும் போதும் கதைக்கும் போதும்
வேணவாக் கொண்டவர் வேண்டி யிருந்தார்
வேதவனன் தாள்கள் வேண்டிப் பணிந்து
சீதமுறு மவனெழிற் சீர்மைகள் கொண்டவன்
பாதம் பணிந்து பலநாள் முயன்று
நாதம் உடனே நற்றமிழ் தன்னில்
இந்நூல் தன்னை இயன்ற வகையில்
நன்னூல் எனவே நானிங் களித்தேன்
இந்நூல் அதனில் இருக்கும் பிழைகள்
நற்றமிழ் வல்லோர் நாடித் தேர்ந்தென்
சிற்றறிவுக் கெட்டிடச் செப்பிட வேண்டி
அந்தாதி இதனை அர்ப்பணஞ் செய்கிறேன்
அன்புடன் வயலூ ரானிவன் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

நன்றுயர் ஈழநாட்டில் நன்குமே யோங்கிடும்
என்றுமுயர் யாழ்நகர் தன்னிலே - மன்னுபுகழ்
தென்மராட்சி யென்றிடும் சீர்பதி தானுமே
பொன்றாப் புகழுறும் போற்று 1

போற்றுமுயர் தென்மராட்சிப் பொற்பதி தன்னிலே
ஏற்றுமுயர் கல்வயல் என்றுமே . சாற்றுபுகழ்
ஓங்கிடச் செய்து உயர்வையும் காணுமே
பாங்குடன் நீயிருந்து பார் 2

பார்தனில் என்றும் படிப்பால் உயர்ந்துள
சீர்பெறும் அன்பர் சிறந்துமே - ஊர்தனை
என்றும் உயர்த்தியே ஏற்றமும் பெற்றிட
நன்றே யுழைப்பர் நனி 3

நனிபுகழ் கல்வயல் நற்றமிழ் ஊரில்
கனிமரஞ் சூழ்ந்திருந்து காய்த்து - தனிப்பெரும்
நல்லெழில் கூட்டியே நாளெலாம் நிற்குமே
செல்வமும் கூட்டுமே செப்பு 4

செப்பிடும் நல்லதோர் செய்நிலம் சூழ்ந்துமே
ஒப்பிலா தென்றும் உயர்ந்திட - இப்பாரில்
கல்வயல் மக்கள் கவினுற வாழ்ந்துமே
பல்லறம் பேணிடுவர் பார் 5

பார்புகழ் ஆதிசைவப் பண்புயர் அர்ச்சகரால்
சீர்பெறவே ராமரின் சிற்றிடத்தில் - ஊருயர
ஆக்கிய நல்லெழில் ஆலயம் தன்னிலே
நீக்கமற நின்றான் நிறைந்து

6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்துள நல்லெழில் நீள்பலா தன்னின்
கறையிலா நீழலிற் காக்க - நிறைவாய்
அணியெனச் சூழ்ந்து அவனருள் வேண்டிப்
பணிவோர் தமையுமே பார் 7

பார்தனி லோங்கிடும் பாரத நாட்டிலுள
ஓர்பெரும்வே தாரண்ய ஒண்பதியில் - சீர்பெற
வீற்றிருந்த நாதனை வேண்டிக் கொணர்ந்துமே
போற்றிப் பணிந்தாரே பார் 8

பார்தனி லோங்கிடும் பாங்குறு கல்வயலின்
பேர்தனை யென்றும் பெருக்கிட - சீர்தரு
வேதவனன் தானமர்ந்து விக்கினங்கள் நீக்கியே
காதலுடன் காப்பான் கனிந்து 9

கனிவுடன் கல்வயலைக் காத்துமே நிற்கும்
நனிபுகழ் வேதவன நாதன் - பணிவுடன்
வந்துமே வாழ்த்தி வணங்கும் அடியரைப்
பந்தமறக் காப்பான் பணி 10

பணிந்தே வணங்கிப் பரவிடும் அன்பர்
பிணியினை நீக்கிடும் பிள்ளை - அணியாய்
அவர்தமைத் தானிவ் வகிலமது தன்னிற்
சிவகதி சேர்ப்பானே செப்பு 11

செப்பிடும் நல்லெழிற் செய்களனி சூழ்ந்துமே
ஒப்பிலா தென்றும் உயர்த்திட - இப்பாரில்
பற்றுடன் தன்னைப் பணியும் அடியாரை
முற்றுறக் காப்பான் முனைந்து 12

முனைந்துமே நாளுமவன் முன்னருள் வேண்டி
நினைந்து வணங்கியே நின்றால் - முனைந்து
உயர்வினைத் தந்துமே ஊக்கம் தருவான்
நயமுடன் நாளுமே நம்பு 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிடும் அன்பரை நாளெல்லாம் காத்துமே
நம்பிக்கை தந்து நலமுடன் - தும்பிக்கை
தூக்கியே காப்பான் துணிந்து துயரினைப்
போக்கியே நிற்பான் புகல் 14

புகன்றிடும் கல்வயற் புண்ணிய வூரிற்
திகன்றிடும் வேதவனத் தெய்வம் - சுகமெலாம்
தந்துமே காப்பான் தரணியை என்றுமிங்கு
வந்துமே நீயும் வணங்கு 15

வணங்கிப் பணியவென வாகாய் விழாக்கள்
இணங்கி நடக்குமே யீங்கு - கணபதியின்
மாதச் சதுர்த்தியில் மாண்புறு மோர்விழா
ஏதமின்றிச் செய்வரே யீங்கு 16

ஏதமிலா நல்லடியார் என்றென்றும் கூடியே
காதலுடன் தைப்பூசம் காணவே - கோதற
நல்வழி காட்டுவான் நம்பியே வந்துநீர்
தொல்லையின்றி வாழ்வீர் தொடர்ந்து 17

தொடர்ந்துமே வந்திடும் தூயநன் னாளிற்
கடந்துமே சென்று களனி - திடமாய்
புதுநெல் லெடுத்துப் புதுச்சோற்றை யுண்ணும்
புதுமை நடக்கும் புகல் 18

புகன்றிடும் வேதவனப் பொற்பதி தன்னிற்
திகன்றிடும் தெய்வம் தெளிவாய் - இகத்தினில்
நல்வழி காட்டியே நாளும் எமக்குறுந்
தொல்லை தவிர்க்கும் தொடர்ந்து 19

தொடரும் துயர்கள் தொலைவில் அகன்று
அடங்கிட வேண்டியே அன்பாய் - நடந்து
அருகுள வேதவனத் தப்பனை யேத்தப்
பெருமை தருவனே பேசு 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிடும் மாசியிற் பெட்புடன் என்றுமே
மாசிவ ராத்திரி மாண்புறக் - காசினி
போற்றிடும் கல்வயற் பொற்பதி தன்னிலே
ஏற்றம் பெறுமே இனிது 21

இனிதுறச் சித்திரையி லாரம்பித் திங்கு
நனிபுக ழாடிவரை நன்றாய் - தனிப்பெருங்
கந்த புராணத்தைக் காதலுட னோதியே
சிந்தை மகிழ்வரே செப்பு 22

செப்பிடும் நல்ல சிவனம்மை கல்யாணம்
தப்பின்றி யோதித் தரணியில் - ஒப்பில்
கஜமுக னுற்பத்திக் காண்டமும் நன்றாய்
நிஜத்திலே காட்டுவர் நின்று 23

நின்று மகேந்திர நீள்காண்டம் தன்னையே
ஒன்றா யிணைந்தே யுரைத்திட - அன்றுள
அன்பர்கள் கூடி யருகமர்ந்து கேட்டுமே
இன்பமும் காண்ப ரிருந்து 24

இருந்து வருத்திடும் இன்னலைப் போக்கி
வருந்தும் நிலையினை வாட்டி - அருளினை
வாரி வழங்கிடும் வள்ளலாம் வேதவனன்
பாரில் உயர்த்துவன் பார் 25

பார்த்திடச் சிங்கமுகன் பாடல்கள் தன்னொடு
சேர்த்துமே சூரன் திருக்கதையும் - சீர்பெற
நல்லடியார் கூடியே நாடிப் படித்திடத்
தொல்லைகள் நீங்கும் துணி 26

துணிவுடன் போரினைத் துல்லியமாய்ச் சொல்லிப்
பணிவாய் படிப்பர் புராணம் - அணியாய்
அடிமுடி தேடலும் ஆங்கே தொடரப்
படித்து முடிப்பரே பார் 27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்தனில் வள்ளியொடு பாங்கியாய் தெய்வயானை
சேர்த்துத் திருமணஞ் செய்துமே - ஓர்பெரும்
அன்னதானந் தந்துமே அப்படிப்பைத் தீர்த்திடும்
தன்னிகரில் ஆலயம் தான் 28

தானே வளர்ந்து தமிழால் உயர்ந்துமே
வானே புகழ்ந்திடு வண்ணமாய் - ஊனே
உருகிட உள்ளம் உவக்க இருந்தே
பருகுவர் பற்றிப் பணிந்து 29

பணிந்தே யவனைப் பரவிடு வோரைத்
துணிந்துமே காத்திடும் தூயன் - அணியாய்
வருதுயர் தீர்ப்பான் வரமும் தருவான்
பெருமையை நீயுமே பேசு 30

பேசிடும் கல்வயற் பெட்பார் பதியினில்
ஆசறக் கற்ற அடியவர் - மாசற
வேண்டிப் பணிந்தவர் வேதனை தீர்ந்திட
மாண்புற வாழ்வர் மகிழ்ந்து 31

மகிழ்ந்துமே யாவணி மாசதுர்த்தி தன்னில்
நெகிழ்ந்துமே வைத்திடும் நேர்த்தி - சகத்தில்
இனிது நிறைவேற இன்னருள் தந்தே
பணிவுடன் காப்பான் பகர் 32

பகர்ந் திடும் கார்த்திகைப் பண்புயர் மாதத்
திகழும் திருக்கார்த் திகையில் - அகமே
மலரத் திருவிளக்கு மாண்புடன் ஏற்றித்
துலங்கிடச் செய்வர் தொடர்ந்து 33

தொடர்ந்து மறுநாளிற் தும்பிக் கரத்தான்
படரும் கதையின் படிப்புத் - திடமாய்
இருபத் தொருநாள் இனிதுறச் செய்தே
விரும்பி யெடுப்பர் விழா 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவாய் விரதம் விருப்புடன் செய்தே
உலாவும் பிணியை ஒறுத்து - விழாவின்
இறுதியில் நல்லதோர் ஹோமமும் செய்து
இரும்பூ தடைவ ரினிது 35

இனிதுற மார்கழி இன்றமிழ் மாதம்
நனிபுக ழோர்விழா நன்றே - கனிவாய்
அலங்கார வுற்சவமாய் அற்புதமாய்ச் செய்து
நலமும் பெறுவரின் னாள் 36

நாளும் பொழுதும் நலமது வேண்டியே
வாழும் அடியார் வணங்கிடச் - சூழும்
துயரினைப் போக்கித் துலங்கும் படியாய்
இயங்கிடச் செய்வா னினிது 37

இனிதே விநாயகர்க்கு இன்னறும் பூசை
கனிவாய் முருகேசர் காட்ட - நனிபுகழ்
வேதவனன் தானும் வினைகளை நீக்கியே
பாதகம் தீர்ப்பானே பார் 38

பார்மிசை வேதவனப் பாங்குறு மாலயத்தில்
பேர்பெறு மாதிரை பின்னாக - ஓர்பெரும்
சாந்தீக வுற்சவம் சால்புடன் செய்துமே
சாந்தி பெறுவரெனச் சாற்று 39

சாற்றுமுயர் தேரின்பின் சால்புறு தீர்த்தநாளில்
ஏற்றுமுயர் ஊஞ்சல் இசைத்துமே - போற்றுமுயர்
வேதவனன் தன்னை விருப்புடன் ஆட்டியே
வேதனை தீர்ப்பர் விரும்பு 40

விரும்பும் படியாய் விதானையார் ராமர்
கருதியே தந்திட்ட காணிக் - கரையாய்
பருத்தே யுயர்ந்த பலாமர நீழல்
விரும்பி யுறைந்தானை வேண்டு 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிப் பணிந்துமே வேதவனப் பிள்ளையை
ஈண்டு பணிந்துமே இன்புற - மாண்புயர்
ஏரம்பச் செம்மலும் ஏற்றுமே பூசையை
ஊரறியச் செய்தார் உவந்து 42

உவந்தே யவரின்பின் உத்தமப் பூசை
புவனியே போற்றிடும் புண்யர் - தவத்துயர்
பொன்னுச்சா மிக்குருவும் போற்றிப் பணிந்துமே
இன்புறச் செய்தாரே யிங்கு 43

இங்குயர் வேதவன இன்னறு மாலயத்தில்
பங்கமறப் பூசனை பண்ணிய - எங்கள்
முருகேசர் தானும் முதுமை யடையத்
திருவடி வேண்டினர் தேர்ந்து 44

தேர்ந்து நடேசர் திருத்தமாய் பூசையை
ஆர்வத் துடனியற்றி ஆங்குமே - பேர்பெறும்
வேதவனன் தன்னை விரும்பிப் பணிந்துமே
சோதனை தீர்த்தார் துணிந்து 45

துணிந்துமே ஆலயம் சூழ்புவி தன்னில்
அணியாய் உயர அவரும் - பணிவுடன்
ஆலயம் தன்னை அழகுறச் செய்துமே
ஞாலம் உயர்த்தினார் நன்று 46

நன்றாய் அவர்பின் நலமுற ஆலயத்தின்
குன்றாப் புகழினைக் கூட்டியே – என்றும்
கதிரேச பிள்ளையும் காதலுடன் ஏற்று
அதிகம் பணிந்தார் அறி 47

அறிவுரை கேட்டுமே ஆலயந் தன்னை
நெறிமுறை தன்னில் நிகழ்தித் - தறிகெட்
டலையும் தருணரை ஆற்றுப் படுத்தி
நிலைபெறச் செய்தாரே நீடு 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடுபுகழ்க் கல்வயலில் நின்றிடும் வேதவனன்
பாடுபடும் அன்பரைப் பாரினில் - பீடுற
நன்கே யுயர்த்தி நலமெலாம் நல்கியே
நின்று தருவான் நிறை 49

நிறையும் அடியவர் நிம்மதி வேண்டிக்
கறைமிடற் றண்ணலையே கண்டு — குறைவறப்
போற்றி வணங்கிப் புகழும் பெறுவரே
ஏற்றிப் பணிமின் இனிது 50

இனிதே நடக்கும் இருகாலப் பூசை
கனிவுடன் எம்மையே காக்கும் - நனிபுகழ்
வேதவனன் ஆலயம் விண்ணோரும் போற்றிட
ஏதம் தவிர்க்குமென எண்ணு 51

எண்ணிப் பெரியோர் இணைந்து பணிவிடை
திண்ணமாய்ச் செய்தே யிருந்திட — நண்ணும்
அடியர்க் கருளினை அள்ளி வழங்கி
விடிவைத் தருவான் விளம்பு 52

விளம்பிடும் கல்வயல் வித்தகன் தன்னின்
அழகுறு மாலயத் தாங்கே — நிழலென
நின்றே யிருந்து நிறைவினைத் தந்திடும்
பன்னெடுங் காலம் பலா 53

பலாமர நீழலிற் பாங்குட னென்றும்
சிலாகித் திருக்கும் சிறப்பு — உலாவி
அடியர்க் கருளினை அள்ளி வழங்கி
விடிவைத் தருவான் விளம்பு 54

விளம்பி யவன்புகழ் விண்ணோரும் போற்றிக்
களங்க மகற்றக் கருத்தாய் - உளத்தில்
நிதமும் அவனை நினைத்து வணங்கிப்
பதத்தைப் பணிவரே பார் 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்தனி லோங்கிடும் பண்புறு கல்வயல்
ஊர்தனி லென்றும் உயர்வுறச் - சீராக
வேதவன நாதன் விரும்பி யமர்ந்துமே
சீதம் தருவான் சிறந்து 56

சிறப்புற அன்னதானம் செய்தே மகிழ்ந்து
அறப்பணி செய்யும் அடியார் - நிறைவுடன்
நன்றே யுயர்வினை நாநிலந் தன்னிலே
அன்றே யடைவர் அறி 57

அறிவார் குருமார் அவனடி போற்றி
நெறிமுறை தன்னிலே நின்று – செறிவுடன்
பூசனை செய்து புவனம் உயர்ந்திட
நேசமும் கொள்வர் நினை 58

நினைந்தே யுருகிடும் நின்னடியார் தங்கள்
நினைவில் நிறைந்துமே நின்று – உனையுமே
போற்றிடச் செய்வாய் புகலிடம் தந்துமே
ஏற்றிடச் செய்வாய் இனிது 59

இனிதாய் உறையும் இறைவா உனையே
கனிவுடன் போற்றிக் கருத்தாய் - நனிபுகழ்
உன்றலம் நாடி யுறைவோர் தமையுமே
என்றுமே காப்பாய் இனி 60

இனிமை தருமென் னிறையே எனது
தனிமை தவிர்க்கும் தலையே – கனிவுடன்
காத்திடும் எங்கள் கணபதித் தெய்வமே
ஏத்துவாய் என்றும் எமை 61

எமையுமே என்றும் இடரில் இருந்து
இமைபோலக் காத்தே இருப்பாய் - சுமையாய்
இருக்கும் துயரை எளிதில் அழித்துக்
கருணை தனையுமே காட்டு 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிடும் கல்வயலூர் காருண்யர் கூட்டமாய்ப்
போட்டிட்ட திட்டம் பொலிவுற — நாட்டமாய்
நல்வைரக் கல்லினால் நன்றுயர்ந் தாலயம்
நல்லொளி வீசிடுதே நாடு 63

நாடியே வந்திடும் நல்லடியார் தாமிங்குக்
கூடிப் பஜனை குழுவாகப் - பாடிப்
பரவிப் பணிந்துமே பாதகம் தீர்ப்பார்
வரமும் பெறுவார் வணங்கு 64

வணங்கிப் பணியநல் வாகாய் விழாக்கள்
இணங்கி நடக்குமே யீங்குக் - கணமும்
மறந்திடா நின்று மனதால் நினைந்து
விறலே யடைவர் விரும்பு 65

விரும்பும் படியாய் விநாயகன் தன்னைக்
கருத்தில் இருத்தியும் கொண்டே — செருக்களம்
சென்றா லுடனே செயமும் கிடைக்குமே
வென்றே விடலாம் வினை 66

வினைதனை நீக்கும் விநாயகன் தன்னை
நினைவில் இருத்தியே நின்று — மனையில்
நலமாய்ப் பணிகள் நடாத்தியே நின்றால்
உலகம் உவக்கும் உணர் 67

உணர்வில் உறைந்திடு முத்தம நாதன்
இணங்கும் படியாய் இருந்து — வணங்கி
விரதம் இருந்துமே வேண்டிப் பணியின்
கரவும் மறைந்திடுங் காண் 68

காணும் கணபதியைக் கைகூப்பி யென்றுமே
பேணிப் பணிந்து பெருமையாய் - மாணுற
நின்று வணங்கி நெடுவரம் பெற்றுமே
குன்றாப் புகழைக் குவி 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியும் அறிஞரும் கூடிப் பரவித்
தவிப்பைத் தவிர்த்திடத் தானே - நவிலும்
நலப்பதி கல்வயல் நண்ணியே வந்து
பலத்தைப் பெறுவர் பணிந்து 70

பணியும் அடியரைப் பாரில் உயர்த்தி
அணிபெறச் செய்திடும் அப்பன் - நனிபுகழ்
கல்வயல் தன்னிற் கருத்துடன் கூடியே
நல்லருள் நல்குவான் நாடி 71

நாடிப் பணிசெய்யும் நல்லடியார் கூட்டமும்
பாடிப் பரவிப் பணிந்திட – வாடிடும்
தன்மை யகன்று தரணி யிலுயர்ந்து
இன்னல் விலக்குவர் ஈங்கு 72

ஈங்குமே யுள்ள இயன்ற வடியவர்
தாங்கியே செய்யும் திருப்பணியில் - பாங்குற
ஆலயம் தானும் அகிலத் துயர்ந்துமே
சீலம் பெறுமே சிறந்து 73

சிறந்துள நல்லெழிற் சிற்பங் களாலே
நிறைந்து விளங்கி நெடிதாய் - கறையிலா
வண்ணமாய் உள்ள வடிவுயர் கோபுரம்
கண்ணைப் பறிக்குமே காண் 74

காணும் அடியர் கவலைகள் போக்கியே
பேணி அவரையிப் பேர்புவியில் - மாணுறக்
காத்துமே நிற்கும் கணபதி தாளினை
ஏத்தியே நிற்போம் இனி 75

இனிதாய்க் கணபதியை இன்முகத் தோடே
கனிவுடன் கூப்பிக் களிக்க – நனிபுகழ்க்
கல்வயல் வந்துமே காண்பீர் அவன்முகம்
வல்வினை நீங்குமே வாழ் 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் பொழுதினில் வந்துமே எம்மையும்
சூழும் துயரைத் தொலைத்திட - நாளுமினி
வந்தனை செய்துமே வாழ்த்திப் பணிந்திட
நிந்தனை தீர்ப்பான் நினை 77

நினைவில் உயர்ந்து நிலைத்துமே நின்று
மனதில் துயரும் மறையக் -கனவிலும்
கல்வயல் வாழும் கணபதி தன்னையே
நல்விதம் நீயுமினி நாடு 78

நாடும் புகழ்ந்திடு நல்வயல் சூழ்ந்துமே
பீடும் பெருக்கும் பெரும்பதி — வாடிடும்
மக்களைக் காத்திந்த மண்ணகம் தன்னிலே
எக்கணமும் பேணும் இனிது 79

இனிதுற வேலனும் இன்முகங் காட்டும்
நனிபுகழ்க் கண்ணனும் நண்ணிக் — கனிவுடன்
நல்லருள் தந்துமே நம்மையுங் காத்திட
வல்வினை தீரும் வழுத்து 80

வழுத்தி யெழுந்துமே வல்வினை தீர
அழுத்திக் கணபதியை அன்பாய் - இழுத்து
மனத்தில் இருத்தி வணங்கி மகிழ்ந்தால்
கனத்த துயரழியும் காண் 81

காண்டரிய பேரூராம் கல்வயல் தன்னையே
மாண்புயரச் செய்திடு மாலயம் - ஈண்டுயர்ந்து
நல்லொளி வீசியிந்த நாநிலத் தோங்கிடவே
பல்லோரும் பாடுவர் பண் 82

பண்புயர் பண்டிதர் பாங்குறு வித்துவான்கள்
பண்ணுடன் பாடும் புராணங்கள் - பண்பில்
உயர்வுறச் செய்து உலகினில் நன்றாய்
இயங்கிடச் செய்யும் இனி 83


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய பலாவின திண்சுவை நாடிக்
கனியை ஒருவன் கவர்ந்தே – நனிபுகழ்
ஆலயம் விட்டு அகன்று விலகிடக்
கோலமும் காட்டினான் கூறு 84

கூறு கணபதிதன் கோலமும் காட்டியே
மாறு படிந்தவனை மாற்றிநல் - ஆறுதல்
தந்துமே யிந்தத் தரணியது தன்னிலுயர்
சிந்தனை தந்தனன் தெரிந்து 85

தெரிந்து கணபதியின் சேவடி பற்றச்
சரிவே வராது சகத்தில் - பரிந்து
அவன்புகழ் பாடி யரும்பணி செய்வோர்
அவதூ றைடயார் அறி 86

அறிவுடை அவ்வைக்கே அன்றருள் நல்கி
நெறிமுறை தன்னில் நிறுத்தி - உறுதியாய்
நின்றிடச் செய்து நிமலனடி தன்னையே
சென்றிடச் செய்தானைச் சேர் 87

சேர்ந்துமே ஒன்றாய் சிறப்புறு கல்வயற்
பேர்பதி தன்னிற் புகுந்துள – ஏரம்பன்
எங்களின் வேதவன ஏந்தலும் இப்புவியில்
சங்கடம் தீர்ப்பனே சாற்று 88

சாற்றுமுயர் வேதவனன் சங்கடங்கள் தீர்த்திடப்
போற்றும் பணிகள் புரிந்திட – ஏற்றுமுயர்
கல்வயல் தன்னைக் கருத்துடன் நாடியே
எல்லோரும் வாரீர் இனிது 89

இனிதுறக் கல்வயலை இன்னலின்றிக் காக்கும்
நனிபுகழ் வேதவன நாதன் - கனிவுடன்
தங்குறை கூறிச் சரணடைவோர் தம்மையே
பங்கமின்றிக் காப்பானே பார் 90


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தும் புகழ்ந்தும் பரவிப் பணிந்துடன்
சேர்ந்தும் இருந்து தெளிவுற – ஆர்வமாய்
பாடிப் பணிசெயும் பண்புளோர் தாமுமே
நாடிப் பெறுவர் நலம் 91

நலந்திகழ் கல்வயல் நற்பதி தன்னில்
தலங்கொண்ட நாதன் தனையே – வலம்வந்து
நம்பிக் கரத்தினால் நாளுந் தொழுதிடத்
தும்பிக் கரமே துணை 92

துணையாய் இருந்து துயர்கள் அகல
அணைத்துமே காத்திடும் அப்பன் - இணையென
இப்புவி வந்துமே இன்னலின்றிக் காத்திடுவான்
தப்பின்றி எம்மையே தான் 93

தானென எண்ணும் தலைக்கனம் தீர்ந்துமே
வானென மன்றுளோர் வாழ்த்திட – ஊனை
உருக்கியே என்றும் உளமாரப் போற்றி
இருப்பீரே என்றும் இனிது 94

இனிதுற ஆண்டின் இறுதியில் தானே
நனிபுகழ் உற்சவம் நன்றாய் - தனிப்பெரும்
ஆற்றல் உடனே அவனியிற் செய்துமே
போற்றிப் புகழ்வர் புகல் 95

புகன்றிடும் கல்வயற் புண்ணிய வூரிற்
திகழ்ந்திடும் ஆலயம் தன்னில் -அகமகிழ
நாடி யிருந்திடும் நம்பனைப் போற்றியே
நாடிப் பெறுவர் நலம் 96

நலமெலாம் நல்கிடும் நம்பனின் நல்ல
தலத்தினில் என்றும் தரித்துப் -பலத்தினைப்
பெற்றிட இந்தப் புவியது தன்னிலே
நற்றவம் செய்தல் நலம் 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம்பெற நாளும் நனிபுகழ் ஓங்கும்
தலமது கல்வயல் தன்னில் - வலம்வரும்
வேதவன நாதனை வேண்டிப் பணிந்திடின்
கோதற வாழலாம் கூறு 98

கூறுமுயர் இன்பம் குவலயத்திற் கண்டுமே
பேறாய்ப் பெருவாழ்வு பெற்றிட – வீறுடன்
தேடியே வேதவனன் சேவடி போற்றிட
நாடிப் பணிவீர் நயந்து 99

நயந்துமே கல்வயல் நாதனை நாடி
மயக்கம் தவிர்த்து மகிழ்வீர் -இயன்ற
நலச்செயல் எல்லாம் நலமுறச் செய்யின்
மலர்ந்திடும் இங்கே மரபு. 100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை நூலாசிரியர் பெற்றுள்ள கௌரவப் பட்டங்களும் வழங்கிய நபர்களின் / நிறுவனங்களின் விபரங்களும்

01. வேதவனக் கவிமாமணி - சிவஸ்ரீ.கி.சோமசுந்தரக் குருக்கள் - 2013.12.06

02. தெய்வீகக் கவிவள்ளல் - கல்வயல் வேதவன விநாயகர் ஆலயம் - 2014.07.05

03. தமிழ்க்கவி - மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திவிநாயகராலயம் - 2016.04.24

04. கவிக்கோன் - உடுவில் குபேரகா கலை மன்றம் - 2017.09.17

05. சமுகஜோதி - உடுவில் குபேரகா கலை மன்றம் - 2018.05.20

06. கிராமிய மன்னன் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2017.12.21

07. மரபுச் சுடர் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா -2020.02.02

08. சந்தப்பாமணி - ஊலழள குழுமம் , இந்தியா -2020.03.05

09. வெண்பா வித்தகர் - ஊலழள குழுமம் , இந்தியா -2020.05.13

10. கவி இமயம் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.07.21

11. கவித் திலகம் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா -2020.07.28

12. தமிழ்நதி - நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம், வரணி -2018.08.22

13. நூலக சேவையாளர் - வரணி பொது நூலகம் -2019.11.24

14. வேதவனக் கவிராயர் - சிவஸ்ரீ.கி.சோமசுந்தரக் குருக்கள் - 2020

15. கவிச் செம்மல் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா -2020.07.29

16. கவித் தென்றல் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.08.16

17. ஆசுகவி - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.08.15

18. மரபொளிர் கவிச் செம்மல் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.

19. கவிப் புயல் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.10.05

20. மரபு மணி - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.10.24

21. வெண்பா மணி - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.10.29

22. கிராமியக் கவி - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.10.28

23. கவி முகில் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.11.03

24. விருத்தப்பா வித்தகர் - கவியுலகப் பூஞ்சோலை, இந்தியா - 2020.11.08

25 ஔவைக்கனிப் பாவலர் - கவிச்சோலை குழுமம் , இந்தியா - 2020.11.21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை இவரால் வெளியிடப்பெற்ற நூல்கள்


1. பாலர் பாடல் திரட்டு :- 1997
2. வேதவனம் :- 2012.12.17
3. வேதவன விநாயகர் பிள்ளைத் தமிழ் :- 2013.12.06
4. வயலூரானின் வரிகள் :- 2016.04.24
5. நெஞ்சுறுத்தும் நிஜங்கள் :- 2017.04.04
6. பனிக்கண்டிக்காளி :- 2018.03.19
7. பன்றித்தலைச்சி அம்மன் பிள்ளைத்தமிழ் :- 2019.03.18
8. குருதிபடாக் காயங்கள் :- 2019.08.14
9. வேதவன விநாயகர் கவசம் :- 2019.12.31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org